# காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

## திருக்குவளையில் முதல்வர் தொடங்கி வைத்தார்

**நாகப்பட்டினம், ஆக. 25:** தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை நாகை மாவட்டம், திருக்குவளையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டத்தால் தமிழகத்தின் கல்வி விகிதம் அதிகரிப்பது உள்பட பல நன்மைகள் கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

நாகை மாவட்டம், திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழகம் முழுவதும் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கத்தை தொடங்கி வைத்து அவர் பேசியதாவது:

காலை உணவுத் திட்டத்தை கடந்த ஆண்டு அறிஞர் அண்ணா பிறந்த நாளில் மதுரையில் தொடங்கி வைத்தேன். முதல்கட்டமாக 1.14 லட்சம் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இப்போது இத்திட்டம் 31,008 பள்ளிகளில் 17 லட்சம் மாணவர்கள் பயன் பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தருகிற திராவிட மாடல் அரசின் திட்டங்களில் காலை உணவுத் திட்டம் முக்கியமானது. 'உண்டி



திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தும் நிகழ்ச்சியில், மாணவ, மாணவிகளுக்கு உணவு பரிமாறுகிறார் முதல்வர் மு.க. ஸ்டாலின்.

கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று மணிமேகலை காப்பியம் சொன்னபடி, உயிர் கொடுக்கும் அரசாக, திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

இன்றைய மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் முன்னாள் முதல்வர் கருணாநிதி பாடமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் இத்திட்டத்தின் விரிவாக்கத்தை அவர் படித்த திருக்குவளை பள்ளியில் இருந்து தொடங்கியுள்ளோம்.

மனிதர்களுக்கு மூன்று வேளை உணவு தேவை. அதிலும் காலையில் நன்றாக சாப்பிட வேண்டும் என்று சொல்வார்கள். அப்போதுதான் அதிகமாகப் பணியாற்ற முடியும்.

ஆனால், காலை உணவே சாப்பிடாத பிள்ளைகளால் எப்படி கல்வியில் கவனம் செலுத்த முடியும்? மேலும், ரத்த சோகை பாதிப்பில் இருந்து குழந்தைகள் மீள ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 50 கிராம் அளவு காலை உணவு வழங்கினால் அவர்களுக்கு கூடுதலாக சத்துகள் கிடைக்கும் என்று ஆய்வில் தெரிய வந்தது. அதனால்தான் காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியில் ஆர்வத்தோடும், அக்கறையோடும் ஈடுபட்டோம்.

நிதி ஒதுக்கீடு என்று சொல்வதை விட, நிதி முதலீடு என்றே சொல்ல விரும்புகிறேன். ஏனெனில், மாணவர்களின் அறிவை, உள்ளத்தை மேம்படுத்த அரசு நிதி முதலீடு செய்திருக்கிறது. அந்த முதலீடு நிச்சயமாக நாட்டுக்கு லாபம் தரும் வகையில் ஆற்றலாக, திறமையாக வெளிப்படும்.

**முன்னோடி மாநிலம்:** நாட்டிலேயே புதுப்புது திட்டங்களைக் கொண்டுவந்து, முன்னோடி மாநிலமாக இருப்பதில் முதலிடத்தில் உள்ள மாநிலம் தமிழகம். அதில் இந்தக் காலை உணவுத் திட்டம் மிக மிக முக்கியமானதாகும். மாணவர்கள் பசியில்லாமல் பள்ளிக்கு வரவேண்டும். ஊட்டச்சத்து இல்லாத குழந்தைகள் இல்லை என்ற நிலை இருக்க வேண்டும். ரத்த சோகை என்ற குறைபாட்டை நீக்க வேண்டும்.

> பசிப்பிணி நீங்கிவிட்டால், மனநிறைவோடு பிள்ளைகள் படிப்பார்கள். அவர்கள் மனதில் பாடங்கள் பதியும். பள்ளிக்கு ஆர்வத்துடன் வருவார்கள். சீரான வருகைப் பதிவும் இருக்கும். தமிழகத்தின் கல்வி விகிதமும் அதிகரிக்கும்.
>
> - முதல்வர் மு.க. ஸ்டாலின்

பசிப்பிணி நீங்கிவிட்டால், மனநிறைவோடு பிள்ளைகள் படிப்பார்கள். அவர்கள் மனதில் பாடங்கள் பதியும். பள்ளிக்கு ஆர்வத்துடன் வருவார்கள். சீரான வருகைப் பதிவும் இருக்கும். தமிழகத்தின் கல்வி விகிதமும் அதிகரிக்கும்.

தமிழக இளைஞர்கள் அனைவரும் அறிவாற்றல் பொருந்தியவர்களாக உயர்வார்கள். படிப்புடன் விளையாட்டு, கலைத் திறன் ஆகியவற்றிலும் சாதனை படைக்கக் கூடியவர்களாக நிச்சயம் திகழ்வார்கள். இப்படி எத்தனையோ நன்மைகளை நமது மாநிலம் இந்தத் திட்டத்தால் அடையப் போகிறது.

**சமூக நீதிப் பாதை:** பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோர் வகுத்த சமூக நீதிப் பாதையில் அனைத்து அறிவையும் அனைத்து சமூகத்தவருக்கும் தருகிற ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்தச் சூழலிலும் தேசியக் கல்விக் கொள்கை என்கிற பெயரில், நீட் என்ற பெயரில் தடுப்புச் சுவர் போடுகின்றனர்.

**கல்விதான் சொத்து:** மாணவர்களுக்கு காலையும் மதியமும் உணவு வழங்குகிறோம். எனவே, நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் படிக்க வேண்டும். படிப்பு மட்டும்தான் உங்களிடம் இருந்து யாராலும் பறிக்க முடியாத சொத்து. அத்தகைய சொத்தை மாணவர்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும். மற்ற தேவைகளை நிறைவு செய்ய அரசு இருக்கிறது. மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துங்கள் என்றார் அவர்.

# சர்வதேச போட்டிகளில் வெல்லும் மாற்றுத்திறனாளி வீரர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்க அரசாணை

**சென்னை, ஆக. 25:** சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளிலும் வெல்லும் மாற்றுத்திறனாளி வீரர்களுக்கும் உயரிய ஊக்கத் தொகை வழங்குவதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

தமிழக அரசின் சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிவிப்பு:

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பாக சர்வதேச, தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்க 2019-இல் அரசாணை வெளியிடப்பட்டது.

அதில், ஒலிம்பிக் போட்டிகள், உலகக் கோப்பை போட்டிகள், காமன் வெல்த் போட்டிகள், ஆசிய போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகள் மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் இடம் பெற்றிருந்தன.

தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கும் பிரிவு இடம் பெறவில்லை.

இந்தக் குறையைக் கண்டறிந்து அதைக் களைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலினின் வழிகாட்டுதலின்படி தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகள் மூத்தோர் பிரிவில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வெல்பவருக்கு உயரிய ஊக்கத் தொகைகள் முறையே ரூ.5 லட்சம், ரூ.3 லட்சம் மற்றும் ரூ.2 லட்சம் எனவும், இளையோர் பிரிவில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வெல்பவருக்கு உயரிய ஊக்கத் தொகைகள் முறையே ரூ.3 லட்சம், ரூ.2 லட்சம் மற்றும் ரூ.1.50 லட்சம் எனவும் வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நனவாகும் வல்லரசுக் கனவு!



கோதை ஜோதிலட்சுமி

[illegible]

**விண்வெளி ஆய்வுகளும் அவற்றின் முடிவுகளும் இத்துறையில் நம்மை முன்னோடியாக நிறுத்தும். மேலும் இதில் இருக்கும் வர்த்தகம் நமக்குப் பெருமளவில் கைகொடுக்கும். நிலவைப் பற்றிய விண்வெளி ஆய்வுத் தகவல்களுக்கு நம்மை உலக நாடுகள் நாடும்.**

[illegible]

# இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்த இந்தியா-கிரீஸ் உறுதி

புது தில்லி/ஏதென்ஸ், ஆக. 25: பிரதமர் நரேந்திர மோடி கிரீஸில் முதல் முறையாக அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட நிலையில், பல்வேறு துறைகளில் நிலவி வரும் நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்கு இரு நாடுகளும் உறுதியேற்றன.

இருதரப்பு வர்த்தகத்தை வரும் 2030-க்குள் இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் மோடி தெரிவித்தார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் 15-ஆவது மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி கடந்த 22-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார். அப்பயணத்தை முடித்துக் கொண்டு தென்கிழக்கு ஐரோப்பிய நாடான கிரீஸுக்கு அவர் வெள்ளிக்கிழமை சென்றடைந்தார்.

கடந்த 40 ஆண்டுகளில் கிரீஸுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளும் முதல் பிரதமர் என்ற பெருமையையும் மோடி பெற்றார்.

## வர்த்தக நடவடிக்கைகளை 2030-க்குள் இரட்டிப்பாக்க இலக்கு



## பிரதமர் மோடிக்கு கிரீஸின் உயரிய விருது

ஏதென்ஸ், ஆக. 25: கிரீஸில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் உயரிய விருதான 'தி கிராண்ட் கிராஸ் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் ஹானர்' விருது வழங்கப்பட்டது.

கிரீஸ் அதிபர் மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடிக்கு அந்த விருது வழங்கப்பட்டது. அந்த விருதை வழங்கியதற்காக அந்நாட்டு அதிபர் கேத்தரினாவுக்கு இந்திய மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்வதாகப் பிரதமர் மோடி கூறினார். இந்தியா மீது கிரீஸ் மக்கள் கொண்டுள்ள மரியாதையை இந்த விருது எடுத்துரைப்பதாகவும் எக்ஸ் வலைதளத்தில் அவர் குறிப்பிட்டார். இந்தியா-கிரீஸ் இடையேயான வலுவான நல்லுறவை இந்த விருது வெளிப்படுத்துவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் மதிப்பை சர்வதேச அளவில் உயர்த்துவதற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் அயராது உழைத்து வருவதற்காக இந்த விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கிரீஸ் நாட்டின் உயரிய விருதை பிரதமர் மோடிக்கு வழங்கிய அந்நாட்டு அதிபர் கேத்தரினா.

### இந்தியா புறப்பட்டார்

கிரீஸ் பயணத்தை முடித்துக்கொண்டு, பிரதமர் மோடி இந்தியா புறப்பட்டார்.

## 'சந்திரயான்-3: உலகுக்கு திறனை வெளிப்படுத்திய இந்தியா'

ஏதென்ஸ், ஆக. 25: 'சந்திரயான்-3 விண்கலத்தை நிலவின் தென் துருவத்தில் தரையிறக்கியதன் மூலம் இந்தியா தனது திறனை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது' என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கிரேக்கநாட்டுக்கு ஒருநாள் அரசுமுறைப் பயணமாக சென்ற பிரதமர் மோடி, அங்குள்ள ஏதென்ஸ் நகரில் இந்திய வம்சாவளியினர் இடையே வெள்ளிக்கிழமை உரையாற்றினார். அப்போது கடந்த 9 ஆண்டுகளில் இந்தியாவில் அவர் தலைமையிலான அரசு பல்வேறு சாதனைகளை மேற்கொண்டதாகக் கூறி, அவற்றைப் பட்டியலிட்டு அவர் பேசியதாவது:

இந்தியாவில் 13.5 கோடிக்கும் அதிகமானவர்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர். இந்தியர்களின் வருமானம் அதிகரித்து வரும் நிலையில், அது அவர்கள் முதலீடு செய்வதை அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளது.

கடந்த 2014-ஆம் ஆண்டுமுதல் இந்தியாவில் 25 லட்சம் கி.மீ.க்கும் அதிகமான நீளத்தில் ஒளி இழை கேபிள் பதிக்கப்பட்டுள்ளது. இது பூமிக்கும் நிலவுக்கும் இடையிலான தொலைவைவிட 6 மடங்கு அதிகம்.

மிகக் குறைந்த நேரத்தில் சாதனை படைக்கும் வகையில், இந்தியாவில் சுமார் 700-க்கும் மேற்பட்ட மாவட்டங்களுக்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 5ஜி தொழில்நுட்பம் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது.

தற்போது உலகின் உயரமான ரயில் பாலம், சாலை, மிகப் பெரிய கிரிக்கெட் மைதானம், உயரமான சிலை ஆகியவை இந்தியாவில் உள்ளன.

உலக வங்கி, சர்வதேச நிதியம் போன்றவை இந்திய பொருளாதாரத்தைப் புகழ்கின்றன. இந்தியாவில் முதலீடு செய்ய முன்னணி நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று ஆர்வத்துடன் போட்டியிடுகின்றன.

கரோனா பரவலுக்குப் பிந்தைய உலக அமைப்பில் இந்தியாவின் பங்கு வேகமாக மாறி வருகிறது.

நிலவின் தென்துருவத்தில் சந்திரயான்-3 வெற்றிகரமாக தரையிறங்கி, அங்கு தேசியக் கொடியை பதித்ததன் மூலம், இந்தியா தனது திறனை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது என்றார்.

# இந்திய செஸ் இனி கவனம் பெறும்!

**ஆர்.பிரக்ஞானந்தா**

புது தில்லி, ஆக. 25: இந்திய செஸ்ஸில் இனி அனைவரும் கவனம் செலுத்தத் தொடங்குவார்கள் என்று, உலகக் கோப்பை செஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள இந்தியரும், தமிழருமான ஆர்.பிரக்ஞானந்தா கூறினார்.

அஜர்பைஜானில் நடைபெற்ற அந்தப் போட்டியின் இறுதிச்சுற்றில், உலகின் நம்பர் 1 வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சென்னை எதிர்கொண்ட பிரக்ஞானந்தா, அதன் இரு கிளாசிக்கல் ஆட்டங்களையும் டிரா செய்தார். வெற்றியாளரை தீர்மானிக்க நடத்தப்பட்ட டை-பிரேக்கர் ஆட்டங்களில் கார்ல்சென்னிடம் போராடி வீழ்ந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.





## 'அசாதாரணமாக சிந்திப்பவர்'

## இன்னும் அதிகம் சாதிப்பார்: தாயார் நம்பிக்கை



# நிலவில் 8 மீட்டர் பயணித்த சந்திரயான்-3 ரோவர்

**லேண்டர் எடுத்த விடியோவை வெளியிட்டது இஸ்ரோ**



விக்ரம் லேண்டரின் சரிவுத்தளம் வழியாக இறங்கி நிலவின் தரைப்பரப்பில் நகர்ந்த பிரக்யான் ரோவர்.

பெங்களூரு, ஆக. 25: விக்ரம் லேண்டரில் இருந்து பிரக்யான் ரோவர் நிலவின் மீது தரையிறங்கும் விடியோவை இஸ்ரோ வெளியிட்டுள்ளது. இந்த ரோவர் நிலவின் தரைப் பகுதியில் 8 மீட்டர் வெற்றிகரமாக பயணித்ததாகவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சந்திரயான்-3 விண்கலத்தின் உந்துகலனில் இருந்து 26 கிலோ எடை, 6 சக்கரங்கள் கொண்ட பிரக்யான் ரோவர் கலனை சுமந்து சென்ற விக்ரம் லேண்டர் கலன், ஆக.23-ஆம் தேதி மாலை 6.04 மணிக்கு நிலவின் தரை மீது வெற்றிகரமாக தடம் பதித்தது.

நிலவின் தரையின் தன்மையை ஆராய்வதற்காக சென்றுள்ள விக்ரம் லேண்டர் கலனில் இருந்து வெளிவந்த ரோவர் கடந்த 23-ஆம் தேதி நள்ளிரவு 12.30 மணி அளவில் சரிவுத்தளத்தின் வாயிலாக நிலவின் தரை மீது இறங்கியது. நிலவில் விக்ரம் லேண்டர் தடம் பதித்துள்ள இடத்தில் இருந்து 500 மீட்டர் சுற்றளவுப் பகுதியில் பிரக்யான் ரோவர் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், விக்ரம் லேண்டரில் இருந்து சரிவுத்தளத்தில் பிரக்யான் ரோவர் மெல்ல மெல்ல நகர்ந்து நிலவில் தரையிறங்கி, நிலவில் உருண்டோடும் 30 வினாடிகள் கொண்ட விடியோவை எக்ஸ் (ட்விட்டர்) வலைதளத்தில் இஸ்ரோ வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

'ஏற்கெனவே திட்டமிட்டபடி ரோவரின் அனைத்து இயக்கங்களும் சரிபார்க்கப்பட்டன. 8 மீட்டர் தொலைவு பரப்பில் ரோவர் வெற்றிகரமாகப் பயணித்தது. ரோவரில் பொருத்தப்பட்டுள்ள எல்ஐபிஎஸ், ஏபிஎக்ஸ்எஸ் ஆகிய கருவிகள் இயக்கப்பட்டன.

உந்துகலன், லேண்டர், ரோவரில் உள்ள ஆய்வுக் கருவிகள் நன்றாகச் செயல்படுகின்றன' என்று இஸ்ரோ தனது மற்றொரு வலைப் பதிவில் தெரிவித்துள்ளது.

நிலவைச் சுற்றி வரும் சந்திரயான்-2 விண்கலத்தின் ஆர்பிட்டர் கலன், விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கியதும் உயர் துல்லிய கேமராவில் எடுத்த புகைப்படத்தை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

அதில், 'சந்திரயான்-3 திட்ட தகவல்கள்: நான் உன்னை வேவு பார்க்கிறேன்! சந்திரயான்-2 ஆர்பிட்டர், சந்திரயான்-3 லேண்டரின் படத்தை எடுத்தது' என்று குறிப்பிட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY